Royal College of Anaesthetists | Association of Anaesthetists | RA-UK Regional Anaesthesia United Kingdom

# உங்கள் முதுகெலும்பு மயக்க மருந்து

நீங்கள் முதுகெலும்பு மயக்க மருந்துடன் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும்போது என்ன எதிர்பார்க்கலாம் என்று இந்தச் சிற்றேடு விளக்குகிறது.
மயக்க மருந்து மருத்துவர்கள், நோயாளிகள் மற்றும் நோயாளிகளுடைய பிரதிநிதிகள் ஒன்றாகச் சேர்ந்து இதை எழுதியுள்ளார்கள்.

## உள்ளடக்கம்

இந்தச் சிற்றேடு இவற்றை விளக்குகிறது:

- முதுகெலும்பு மயக்க மருந்து என்றால் என்ன
- அது எப்போது பயன்படுத்தப்படுகிறது
- உங்கள் அறுவைச் சிகிச்சைக்கு இதை எடுத்துக்கொள்வதன் மூலம் நீங்கள் பலனடைவது ஏன்
- இது எப்படி வேலை செய்கிறது மற்றும் நீங்கள் எதை எதிர்பார்க்கலாம்
- ஆபத்து மற்றும் பகிர்ந்தெடுக்கும் முடிவுகள்.

## 'முதுகெலும்பு' என்றால் என்ன?

பல அறுவைச்சிகிச்சைகளின்போது, நோயாளிகளுக்குப் பொது மயக்க மருந்து வழங்கப்படுவது வழக்கம். ஆனால், இடுப்புக்குக் கீழே நடைபெறும் அறுவைச்சிகிச்சைகளுக்கு உங்களுக்கு முதுகெலும்பு மயக்க மருந்து வழங்க இயலலாம். இதுபோன்ற நேரங்களில், உங்களுடைய முதுகின் கீழ்ப்பகுதியில் (உங்கள் முதுகெலும்பில் உள்ள எலும்புகளுக்கு நடுவில்) ஓரிட மயக்க மருந்து ஊசிமூலம் செலுத்தப்படுகிறது. இது, இடுப்புக்குக் கீழுள்ள பகுதிகளுக்கு மயக்க மருந்தை வழங்குகிறது. அதன் மூலம், அறுவைச்சிகிச்சையின்போது நீங்கள் வசதியற்று உணரமாட்டீர்கள். முதுகெலும்பு மயக்க மருந்து வழங்கப்பட்டால், நீங்கள் சிகிச்சையின்போது உணர்வுடன் இருக்கலாம்.

பொதுவாக, முதுகெலும்பு மயக்க மருந்தின் தாக்கங்கள் சில மணிநேரங்களுக்கு நீடிக்கும். அதே நேரம், மயக்க மருந்தின் தாக்கம்

விலகியபிறகும் பல மணிநேரங்களுக்கு வலியைக் குறைப்பதற்கு உதவுவதற்கென மற்ற மருந்துகளும் ஊசிமூலம் செலுத்தப்படலாம்.

உங்களுக்கு முதுகெலும்பு மயக்க மருந்து வழங்கப்படும்போது:

- முழுமையாக விழித்திருப்பீர்கள்
- உங்களை இதமாக அல்லது தூக்கக் கலக்கமாக உணரச் செய்யும் மருந்துகளின்மூலம் நீங்கள் மயக்க நிலையில் இருப்பீர்கள். ஆனால், நீங்கள் முழுக்கத் தூங்கமாட்டீர்கள், உங்களைச் சுற்றி நடப்பவற்றை நீங்கள் அறிந்திருக்கலாம்.

சில அறுவைச்சிகிச்சைகளின்போது, உங்கள் அறுவைச் சிகிச்சைக்குப்பிறகு உங்களுக்குக் கூடுதல் வலிக் குறைப்பை வழங்குவதற்கு, பொது மயக்க மருந்துக்கு முன்பு முதுகெலும்பு மயக்க மருந்தும் வழங்கப்படலாம்.

உடலின் கீழ்ப் பகுதிகளில் நடைபெறும் பல அறுவைச்சிகிச்சைகளுக்கு, குறிப்பாக, சாவித்துளை அறுவைச் சிகிச்சைகளுக்கு முதுகெலும்பு மயக்க மருந்து பொருந்தும்.

பல நேரங்களில், முதுகெலும்பு மயக்க மருந்தைத் தனியாகவோ, பொது மயக்க மருந்துடனோ இவற்றுக்குப் பயன்படுத்தலாம்:

- பொது அறுவைச் சிகிச்சைகள், எடுத்துக்காட்டாக, குடலிறக்கம், ஹெமர்ஹாய்ட் அறுவைச் சிகிச்சை (மூலம்) மற்றும் வயிறு தொடர்பான அறுவைச் சிகிச்சைகள்
- இடுப்பு, முழங்கால் போன்ற மூட்டுகள் அல்லது காலில் உள்ள எலும்புகளில் நடைபெறும் எலும்பு சார்ந்த அறுவைச் சிகிச்சைகள்
- இரத்தக்குழாய் அறுவைச் சிகிச்சை: காலில் உள்ள இரத்தக் குழாய்களில் நடைபெறும் அறுவைச் சிகிச்சைகள்
- மகளிர் நோயியல்: ப்ரோலாப்ஸ் பழுதுபார்த்தல்கள், ஹிஸ்டெரோஸ்கோபி மற்றும் சில வகைக் கருப்பை நீக்க அறுவைச் சிகிச்சைகள்
- சிறுநீர்ப் பாதையியல்: முன்னிற்கும் சுரப்பி அறுவைச் சிகிச்சை, சிறுநீர்ப் பை அறுவைச் சிகிச்சைகள், பிறப்புறுப்பு அறுவைச் சிகிச்சை
- அடிவயிற்றில் புற்றுநோய் அறுவைச் சிகிச்சை.

## முதுகெலும்பு மயக்க மருந்தை ஏன் எடுத்துக்கொள்ளவேண்டும்?


உங்களுடைய தனிப்பட்ட நலனைப் பொறுத்து, முதுகெலும்பு மயக்க மருந்தை எடுத்துக்கொள்வதன் மூலம் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கலாம். உங்கள் மயக்க மருந்து மருத்துவர் இதுபற்றி உங்களுடன் பேசுவார், உங்களுக்கு எது மிகச் சிறந்ததாக இருக்கும் என்பதுபற்றித் தீர்மானம் எடுக்க உங்களுக்கு உதவுவார்.

பொது மயக்க மருந்து எடுத்துக்கொள்வதைவிட, முதுகெலும்பு மயக்க மருந்து எடுத்துக்கொள்வதில் உள்ள நன்மைகள்:

- அறுவைச்சிகிச்சைக்குப்பின் நெஞ்சுத் தொற்று ஏற்படும் ஆபத்து குறைகிறது
- காலில் இரத்தக் கட்டிகள் உண்டாகும் ஆபத்து குறைகிறது
- நுரையீரல்கள் மற்றும் மூச்சுவிடுதலில் எதிர்மறைத் தாக்கங்கள் குறைகின்றன
- அறுவைச்சிகிச்சைக்குப்பின் உடனடியாக நல்ல வலிக் குறைப்பு கிடைக்கிறது
- வலியைக் குறைக்கிற வலுவான மருந்துகள் பக்க விளைவுகளைக் கொண்டிருக்கலாம். அவற்றுக்கான தேவை குறைகிறது
- உடல்நலமின்மையும் வாந்தியெடுத்தலும் குறைகின்றன
- அறுவைச்சிகிச்சைக்குப்பின் குடித்தல் மற்றும் சாப்பிடுதலை இன்னும் விரைவாகத் தொடங்கலாம்.

## முதுகெலும்பு மயக்க மருந்து எப்படி வழங்கப்படுகிறது?





- நீங்கள் உங்களுடைய முதுகெலும்பு மயக்க மருந்தை மயக்க மருந்து அறையில் அல்லது அறுவைச் சிகிச்சை அரங்கத்தில் பெறலாம். மயக்க மருந்து வழங்கும் உதவியாளரைச் சந்திப்பீர்கள் நீங்கள் உங்களைக் கவனித்துக்கொள்ளும் குழுவின் ஒரு பகுதியாகச் செயல்படும்.
- மயக்க மருந்து மருத்துவர் அல்லது உதவியாளர் உங்களுடைய இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம் மற்றும் பிராணவாயு அளவுகளை அளவிடும் கண்காணிப்பான்கள் மற்றும் தேவைப்படும் வேறு கருவிகளை இணைப்பார்.
- உங்கள் மயக்க மருந்து மருத்துவர் முதலில் ஓர் ஊசியைப் பயன்படுத்தி ஒரு மெலிதான பிளாஸ்டிக் குழாயை ('கானுலா') உங்கள் கையில் ஒரு பகுதியில் உள்ள ஒரு நரம்பில் நுழைப்பார். இதன்மூலம், உங்களுக்குத் தேவையான நீர்மங்கள் மற்றும் மருந்துகளை உங்கள் மயக்க மருந்து மருத்துவர் வழங்கலாம்.
- முதுகெலும்பு மயக்க மருந்து கொடுப்பதற்கான சரியான நிலையில் இருப்பதற்கு உங்களுக்கு உதவுவார்கள்.
- நீங்கள் படுக்கையின் விளிம்பில் அமர்ந்துகொண்டு உங்கள் கால்களைத் தாழ்வான ஒரு முக்காலியில் வைத்துக்கொள்வீர்கள், அல்லது, நீங்கள் பக்கவாட்டில் சுருண்டு படுத்துக்கொண்டு உங்கள் முழங்கால்களை உங்கள் நெஞ்சை நோக்கி மடக்கிக்கொள்வீர்கள்.
- என்ன நடக்கிறது என்பதை மயக்க மருந்து மருத்துவருடைய குழு உங்களுக்கு விளக்கும். அதன்மூலம், நடப்பதை நீங்கள் அறிந்திருக்கலாம்.
- முதலில், தோலில் உணர்ச்சியற்ற நிலையைப் பெறுவதற்கு ஓரிட மயக்க மருந்து ஊசிமூலம் செலுத்தப்படுகிறது. இதன்மூலம், முதுகெலும்பு மயக்க

மருந்து ஊசி இன்னும் எளிதாகும். மயக்க மருந்து மருத்துவர் முதுகெலும்பு மயக்க மருந்தை ஊசிமூலம் செலுத்துவார்; இதைச் செய்வதற்கு, நீங்கள் அசையாமல் இருக்கவேண்டும். பொதுவாக, ஊசி போடப்படும்போது, செவிலியர் அல்லது நலப் பராமரிப்பு உதவியாளர் ஒருவர் உங்களை ஆதரிப்பார், உங்களுக்கு உறுதியளிப்பார்.

- சில நேரங்களில், சிறுநீர் வடிகுழாய் ஒன்று (உங்கள் சிறுநீர்ப் பையிலிருந்து சிறுநீரை வடிக்கும் நெகிழ்வான குழாய்) தேவைப்படலாம். உங்களுக்கு அது தேவை என்றால், முதுகெலும்பு மயக்க மருந்து வேலை செய்யத் தொடங்கியதும் அது நுழைக்கப்படும்.

## நான் எப்படி உணருவேன்?

பல நேரங்களில், முதுகெலும்பு மயக்க மருந்து ஊசிமூலம் செலுத்துதல் என்பது இரத்தப் பரிசோதனை செய்துகொள்வது அல்லது கானுலா நுழைக்கப்படுவதைவிடக் கூடுதல் வலியைத் தராது. அது செயல்படுவதற்குச் சில நிமிடங்கள் ஆகலாம். ஆனால், அது சில நேரங்களில் இன்னும் கூடுதல் நேரம் எடுக்கக்கூடும். குறிப்பாக, உங்கள் முதுகில் ஏதேனும் பிரச்சனைகள் இருந்தால், அல்லது, நீங்கள் உடல் பருமனுடன் இருந்தால் இவ்வாறு ஆகலாம். சில நேரங்களில், ஒன்றுக்கு மேற்பட்ட முயற்சிகள் தேவைப்படலாம்.

- ஊசி போடப்படும்போது, உங்கள் கால்களில் ஊசிகள் குத்துவதுபோன்ற உணர்வு அல்லது வழக்கத்துக்கு மாறான ஓர் உணர்வு உண்டாகலாம். அப்படி நடந்தால், அசையாமல் இருக்க முயலுங்கள், உங்கள் மயக்க மருந்து மருத்துவரிடம் அதைப்பற்றிச் சொல்லுங்கள்.
- நீங்கள் இதுவரை அமர்ந்துகொண்டிருந்தீர்கள் என்றால், உங்களுக்கு ஊசி போட்டபிறகு உங்களைப் படுத்துக்கொள்ளச்சொல்வது வழக்கம். பொதுவாக, முதுகெலும்பு மயக்க மருந்தின் தாக்கம் சில நிமிடங்களில் தெரியும்.
- முதலில், உங்கள் கால்களிலும் வயிற்றிலும் கதகதப்பான உணர்வு தெரியும், பின்னர் அவற்றைத் தொட்டால் உணர்வற்ற நிலை இருக்கும். படிப்படியாக, உங்கள் கால்கள் மேலும் கனமாவதை, அவற்றை நகர்த்துவது மேலும் கடினமாக இருப்பதை நீங்கள் உணர்வீர்கள். இது மிகவும் இயல்புதான். இதன் பொருள், மயக்க மருந்து வேலை செய்கிறது.
- மயக்க மருந்து முழுக்க வேலை செய்யும்போது, உங்களால் உங்கள் கால்களைத் தூக்க இயலாது, உடலின் கீழ்ப் பகுதிகளில் நீங்கள் எந்த வலியையும் உணரமாட்டீர்கள்.

## மயக்க மருந்து வேலை செய்கிறதா என்று பரிசோதித்தல்

உங்கள் மயக்க மருந்து மருத்துவர் பல எளிய பரிசோதனைகளைப் பயன்படுத்தி, மயக்க மருந்து முறையாக வேலை செய்கிறதா என்று பார்ப்பார். அந்தப் பரிசோதனைகளில் சில:

- குளிர்ச்சியான நீர்மம் ஒன்றைத் தெளித்து, உங்கள் கால்கள் மற்றும் வயிற்றில் நீங்கள் அதை உணர்கிறீர்களா என்று கேட்பது

- உங்கள் கால்கள் மற்றும் வயிற்றை மழுங்கிய முனை கொண்ட ஒரு கருவியால் மெல்லத் தொடுவது
- உங்கள் கால்களைத் தூக்கும்படி உங்களிடம் கேட்பது.

இந்தப் பரிசோதனைகளின்போது கவனம் செலுத்துவது முக்கியம், அப்போதுதான் மயக்க மருந்து வேலை செய்கிறது என்பதை நீங்களும் உங்கள் மயக்க மருந்து வல்லுனரும் உறுதிப்படுத்த இயலும். மயக்க மருந்து வேலை செய்கிறது என்கிற நிறைவெண்ணம் மயக்க மருந்து வல்லுனருக்கு வந்தால்தான் அவர் அறுவைச் சிகிச்சையைத் தொடங்க அனுமதிப்பார்.

## அறுவைச் சிகிச்சையின்போது (முதுகெலும்பு மயக்க மருந்துமட்டும்)

- அறுவைச் சிகிச்சை அரங்கத்தில், உங்களைக் கவனித்துக்கொள்வதற்குப் முழுமையான பணியாளர் குழு ஒன்று இருக்கும். நீங்கள் விழித்திருந்தால், அவர்கள் தங்களை அறிமுகப்படுத்திக்கொள்வார்கள், உங்களை இதமாக உணரச்செய்வதற்கு முயல்வார்கள்.
- மயக்க மருந்து மருத்துவரும் மயக்க மருந்து உதவியாளரும் அறுவைச் சிகிச்சை நேரம் முழுவதும் உங்கள் பாதுகாப்பையும் நலனையும் கவனித்துக்கொள்வார்கள்.
- நீங்கள் அறுவைச் சிகிச்சைக்கு ஏற்ற நிலையில் இருத்தப்படுவீர்கள். உங்களை இன்னும் இதமாக உணரச்செய்யக்கூடியது ஏதும் இருக்குமானால், நீங்கள் உங்கள் மயக்க மருந்து மருத்துவரிடம் அதைச் சொல்லவேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு கூடுதல் தலையணை அல்லது கை வைத்துக்கொள்ளும் வசதி.
- உங்கள் இரத்தத்தில் பிராணவாயு அளவை மேம்படுத்த, எடை குறைந்த, தெளிவான பிளாஸ்டிக் முகமூடி ஒன்றின் வழியாக நீங்கள் மூச்சுவிடுவதற்கு பிராணவாயு வழங்கப்படலாம்.
- அறுவைச் சிகிச்சை அரங்கத்தின் ‘சலசலப்பை’ நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆனால், உங்கள் மயக்க மருந்து மருத்துவர் உங்களைக் கவனித்துக்கொள்வதால், நீங்கள் பதற்றமின்றி இருக்கலாம்.
- நீங்கள் அறுவைச் சிகிச்சையின்போது இசையைக் கேட்க இயலலாம். உங்களுக்கு அனுமதி கிடைத்தால், உங்களுக்குப் பிடித்த இசையை ஹெட்ஃபோனுடன் கொண்டுவாருங்கள். சில அறுவைச் சிகிச்சை மையங்களில் ஹெட்ஃபோன்கள் வழங்கப்படுகின்றன, அல்லது, அறுவைச் சிகிச்சை அரங்கத்தில் இசை ஒலிக்கச்செய்யப்படுகிறது.
- அறுவைச் சிகிச்சையின்போது, நீங்கள் மயக்க மருந்து மருத்துவர் மற்றும் மயக்க மருந்து உதவியாளருடன் பேசலாம். உங்களை மயங்கச் செய்யும் மருந்து உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதா, இல்லையா என்பதைப் பொறுத்து இது அமையும்.
- ஒருவேளை, உங்களை மயங்கச் செய்யும் மருந்து உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால், அறுவைச் சிகிச்சையின்போது நீங்கள் இதமாக இருப்பீர்கள். அப்போது நீங்கள் தூக்கக் கலக்கமாக உணரக்கூடும். அறுவைச் சிகிச்சை நேரம் முழுவதும் நீங்கள் தூங்கிக்கொண்டிருக்கலாம், அல்லது,

சிறிது நேரம் விழித்திருக்கலாம், அல்லது, முழு நேரமும் விழித்திருக்கலாம். அறுவைச் சிகிச்சை அரங்கத்தில் நீங்கள் செலவிட்ட நேரத்தில் சில பகுதிகள் உங்களுக்கு நினைவிருக்கலாம், அல்லது, அனைத்துப் பகுதிகளும் நினைவிருக்கலாம், அல்லது, எதுவும் நினைவில் இல்லாமல் போகலாம்.

உங்களை மயங்கச்செய்தல்பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, எங்களுடைய **மயக்கம் பற்றிய விளக்கம்** என்ற சிற்றேட்டைத் தயவுசெய்து பாருங்கள். இது எங்கள் இணையத் தளத்தில் கிடைக்கும்:
www.rcoa.ac.uk/patients/patient-information-resources/translations#languages

உங்கள் அறுவைச் சிகிச்சைக்கு முதுகெலும்பு மயக்க மருந்து திட்டமிடப்பட்டாலும், சில சூழ்நிலைகளில் உங்களுக்குப் பொது மயக்க மருந்தும் தேவைப்படலாம் என்பதை அறிந்திருப்பது முக்கியம். எடுத்துக்காட்டாக:

- உங்களுடைய மயக்க மருந்து மருத்துவரால் முதுகெலும்பு மயக்க மருந்தை வழங்க இயலாவிட்டால்
- அறுவைச் சிகிச்சை செய்யவேண்டிய பகுதியைச் சுற்றி முதுகெலும்பு மயக்க மருந்து போதுமான அளவு வேலை செய்யாவிட்டால்
- அறுவைச் சிகிச்சை இன்னும் சிக்கலாக இருந்தால், அல்லது, எதிர்பார்த்ததைவிடக் கூடுதல் நேரம் எடுத்துக்கொண்டால்.

## அறுவைச் சிகிச்சைக்குப்பிறகு

- உணர்வு முழுக்கத் திரும்புவதற்கு நான்கு மணிநேரம்வரை ஆகிறது. உங்களுக்கு ஏதும் கவலைகள் இருந்தால், அதுபற்றி உங்கள் மருத்துவப் பிரிவுப் பணியாளர்களிடம் நீங்கள் சொல்லவேண்டும்.
- உணர்வு திரும்பும்போது, நீங்கள் பொதுவாகச் சிறிது கூச்சத்தை உணர்வீர்கள். அறுவைச் சிகிச்சையால் உண்டான வசதியற்ற உணர்வையும் நீங்கள் சிறிதளவு அறியக்கூடும். தேவைப்பட்டால், நீங்கள் வலிக் குறைப்பைக் கோரலாம்.
- முதுகெலும்பு மயக்க மருந்தின் தாக்கம் விலகத் தொடங்கும்போது, உங்கள் கால்கள் சிறிது நிலையற்று இருக்கலாம், உங்கள் இரத்த அழுத்தம் குறைவாக இருந்தால், தலை லேசாக இருப்பதுபோன்ற உணர்வு சிறிதளவு ஏற்படலாம். தயவுசெய்து, நீங்கள் படுக்கையிலிருந்து முதன்முறை எழும்போது, உங்களைக் கவனித்துக்கொள்ளும் பணியாளர்களிடம் உதவி கேளுங்கள்.
- பொது மயக்க மருந்து எடுத்துக்கொள்கிறவர்களைவிட, முதுகெலும்பு மயக்க மருந்து எடுத்துக்கொள்கிறவர்கள் இன்னும் விரைவாகச் சாப்பிட மற்றும் குடிக்கத் தொடங்கிவிடுவது வழக்கம்.

## அறுவைச் சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீட்டு மருந்தகம் (முன்மதிப்பீடு)

உங்களுக்கு ஓர் அறுவைச் சிகிச்சை திட்டமிடப்பட்டிருந்தால், உங்கள் அறுவைச் சிகிச்சைக்குச் சில வாரங்கள் அல்லது சில நாட்கள் முன்பாக, அறுவைச் சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீட்டு மருந்தகம் ஒன்றுக்கு நீங்கள் அழைக்கப்படலாம். சில நேரங்களில், இன்னும் சிறிய அறுவைச் சிகிச◌்சைகளுக்கு, செவிலியர் ஒருவர் உங்களுடன் ஒரு தொலைபேசி அழைப்புக்கு ஏற்பாடு செய்வார், அதில் நீங்கள் சில கேள்விகளுக்குப் பதிலளிக்கவேண்டியிருக்கும்.

அந்த நேரத்தில், தயவுசெய்து இவற்றை உங்களுடன் கொண்டுவாருங்கள்:

- இப்போது நீங்கள் எடுத்துக்கொள்ளும் மருந்துகளின் ஒரு பட்டியல், அல்லது, முழுப் பொதியுடன் உங்கள் மருந்துகள்
- மற்ற மருத்துவமனைகளில் செய்யப்பட்ட பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகளைப்பற்றிய தகவல்கள் ஏதும் உங்களிடம் இருந்தால், அவை
- மயக்க மருந்தினால் உங்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்தினருக்கு நேர்ந்திருக்கக்கூடிய பிரச்சனைகள் பற்றிய தகவல்
- சமீபத்திய இரத்த அழுத்த அளவீடுகள் எவையும் இருந்தால், அவை.

உங்கள் இரத்தத்தை மெலிதாக்க நீங்கள் ஏதேனும் மருந்துகளை எடுத்துக்கொண்டால், உங்கள் அறுவைச் சிகிச்சைக்குமுன்பு நீங்கள் அந்த மருந்துகளை எடுத்துக்கொள்ளாமல் நிறுத்தவேண்டுமா என்பதுபற்றி உங்கள் முன் மதிப்பீட்டுக் குழுவிடம் தெரிவிப்பதும், அதுபற்றி விவாதிப்பதும் முக்கியமாகும்
நீங்கள் மருந்தகத்தில் மயக்க மருந்து மருத்துவர் ஒருவரைச் சந்திக்கலாம். இல்லாவிட்டால், உங்கள் அறுவைச் சிகிச்சை நாளன்று, மருத்துவமனையில் நீங்கள் உங்கள் மயக்க மருந்து மருத்துவரைச் சந்திப்பீர்கள்.

## ஆபத்து மற்றும் மயக்க மருந்து

நவீன மயக்க மருந்துகள் மிகவும் பாதுகாப்பானவை. மயக்க மருந்துகள் அல்லது பயன்படுத்தப்படும் உபகரணங்களிலில் சில பொதுவான பக்க விளைவுகள் உள்ளன, அவை

பொதுவாக தீவிரமானவை அல்லது நீண்ட காலம் நீடிப்பவை அல்ல. தனிநபர்கள் இடையே ஆபத்துகள் வேறுபடும்; அவை பயன்படுத்தப்படும் செயல்முறை மற்றும் மயக்க மருந்து நுட்பம் சார்ந்து இருக்கும்.

உங்களுடைய மயக்க மருந்து நிபுணர் உங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அவர்கள் நினைக்கும் ஆபத்துகளை, உங்களுடன் கலந்தாய்வு செய்வார். அடிக்கடி நடக்காத ஆபத்துகள் எவையேனும் உங்களுக்குப் பொருந்தினால்தான் அவர்கள் அவற்றை விவாதிப்பார்கள்.

முதுகெலும்பு மயக்க மருந்துடன் தொடர்புடைய குறிப்பிட்ட ஆபத்துகள் சில உண்டு. எடுத்துக்காட்டாக, தீவிரமான தலைவலி மற்றும் நரம்புச் சேதம். நீங்கள் இந்த ஆபத்துகளைப்பற்றி இன்னும் விரிவாகப் படிக்க விரும்பினால், தயவுசெய்து, இந்தப் பக்கத்துக்கு வாருங்கள்:
www.rcoa.ac.uk/patients/patient-information-resources/translations#languages

## பகிர்ந்து தீர்மானமெடுத்தல்

தனிநபர்கள் தங்களுக்கு சரியான முடிவுகளை எடுப்பதற்கு ஆதரவளிப்பதை உறுதி செய்கிறது பகிர்ந்தெடுக்கும் முடிவுகள். இது ஒரு கூட்டு செயல்முறையாகும். இதன் மூலம் ஒரு மருத்துவர் நோயாளியின் சிகிச்சையைப் பற்றி முடிவெடுக்க உதவுகிறார்.

உரையாடல் கீழ்க்கண்டவற்றை ஒன்றிணைக்கிறது:

- சிகிச்சை விருப்பங்கள், சான்றுகள், ஆபத்துகள் மற்றும் நன்மைகள் போன்றவைகளில் மருத்துவரின் நிபுணத்துவம்
- நோயாளிக்கு நன்றாகத் தெரிந்தவை: அவர்களின் விருப்பங்கள், தனிப்பட்ட சூழ்நிலைகள், குறிக்கோள்கள், மதிப்புகள் மற்றும் நம்பிக்கைகள்.

மேலும் அறிய: www.england.nhs.uk/personalisedcare/shared-decision-making

உங்கள் மயக்க மருந்து நிபுணர் அல்லது அறுவை சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீட்டு ஊழியர்களுடன் உங்கள் கலந்துரையாடல்களைப் பயன்படுத்துவதற்கு நீங்கள் பயன்படுத்தக்கூடிய சில கருவிகள் இங்கே:

### புத்திசாலித்தனமாக UK BRAN கட்டமைப்பைத் தேர்ந்தெடுப்பது

சிகிச்சை பற்றிய கேள்விகளைக் கேட்க இதை நினைவூட்டலாகப் பயன்படுத்தவும்.
https://bit.ly/CWUK_leaflet

### NHS மூன்று கேள்விகளைக் கேட்கிறது

உங்கள் உடல்நலம் பற்றிய தேர்வுகள் இருக்கலாம்.

https://bit.ly/NHS_A3Qs

### அறுவை சிகிச்சைக்கு முந்தைய பராமரிப்பு மையம் (CPOC)

CPOC-ஆனது பகிரப்பட்ட முடிவெடுப்பை விளக்க அசைவுப்படத்தை உருவாக்கியுள்ளது.

www.cpoc.org.uk/shared-decision-making

# நீங்கள் கேட்க விரும்பும் கேள்விகள்

உங்கள் மயக்க மருந்து பற்றி உங்களுக்கு கேள்விகள் இருந்தால், அவற்றை எழுதுங்கள் (கீழே உள்ள உதாரணங்களைப் பயன்படுத்தி, கீழே உள்ள இடத்தில் உங்களுடைய கேள்விகளைச் சேர்க்கலாம்). நீங்கள் உங்கள் அறுவைச் சிகிச்சை நாளுக்கு முன்பாக மயக்க மருந்து மருத்துவர் ஒருவரிடம் பேச விரும்பினால், அறுவைச் சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீட்டுக் குழுவைத் தொடர்புகொள்ளுங்கள். நீங்கள் மயக்க மருந்து மருத்துவர் ஒருவருடன் தொலைபேசியில் பேசுவதற்கு, அல்லது, அவர்களை ஒரு மருந்தகத்தில் சந்திப்பதற்கு அவர்களால் ஏற்பாடு செய்ய இயலலாம்.

1. **முதுகெலும்பு மயக்க மருந்தால் எனக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகள், தீமைகள் என்ன?**
2. **முதுகெலும்பு மயக்க மருந்துக்குப் பதிலாக வேறு மாற்றுத் தெரிவுகள் எவையேனும் உள்ளனவா?**

## உரிமைத் துறப்பு

இந்த துண்டுப்பிரசுரத்தில் உள்ள தகவல்களை துல்லியமாகவும் புதுப்பித்ததாகவும் வைத்திருக்க நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால் இதற்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது. இந்தப் பொதுவானத் தகவல், உங்களுக்கு இருக்கக்கூடிய அனைத்து கேள்விகளையும் கொண்டுள்ளது அல்லது உங்களுக்கு முக்கியமானவையாக இருக்கக்கூடிய அனைத்தையும் கையாளும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த துண்டுப்பிரசுரத்தை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தி, உங்கள் தேர்வுகள், மற்றும் உங்களுக்குள்ள ஏதேனும் கவலைகள் பற்றி உங்கள் மருத்துவக் குழுவுடன் நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். இந்தத் துண்டுப் பிரசுரம் மட்டும் தனியாக ஒரு அறிவுரையாகக் கருதப்படக் கூடாது. இதை எந்த வணிக அல்லது தொழில் நோக்கத்திற்கும் பயன்படுத்துமுடியாது. முழுமையான பொருப்புத் துறப்பிற்கு தயவுசெய்து இங்கே கிளிக் செய்க
(www.rcoa.ac.uk/patient-information/translations/tamil).

அனைத்து மொழிபெயர்ப்புகளும் Translators without Borders சமுதாயத்தால் வழங்கப்படுகின்றன. மொழிப்பெயர்ப்பை முடிந்தவரை துல்லியமாக இருக்க, மொழிப்பெயர்ப்பின் தரம் சரிபார்க்கப்படுகிறது, ஆனால், சில தகவல்களில் தவறுகள் மற்றும் தவறான விளக்கம் ஏற்படும் ஆபத்து உள்ளது.

# நீங்கள் நினைப்பதை எங்களிடம் பகிரவும்

உங்களிடம் ஏதேனும் பொதுவான கருத்துகள் இருந்தால், அவைகளைபின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்:patientinformation@rcoa.ac.uk

**மயக்க மருந்து வல்லுனர்களுக்கான அரசக் கல்லூரி**
சர்ச்சில் ஹவுஸ், 35 ரெட் லயன் ஸ்கொயர், லண்டன் WC1R 4SG
020 7092 1500

## www.rcoa.ac.uk

## ஆறாவது பதிப்பு, ஏப்ரல் 2023
வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் இந்த துண்டறிக்கை மதிப்பாய்வு செய்யப்படும்.

© **2023** RCoA
நோயாளித் தகவல் தாள் உருவாக்கும் நோக்கத்திற்காக இந்தத் சிற்றேட்டை பிரதியெடுத்துக் கொள்ளலாம். இந்த அசல் மூலத்தை தயவுசெய்து மேற்கோள் காட்டுங்கள். இந்தச் சிற்றேட்டின் ஒரு பகுதியை நீங்கள் இன்னொரு வெளியீட்டில் பயன்படுத்த விரும்பினால், சரியான ஒப்புகை வழங்கப்பட வேண்டும், வணிகச் சின்னங்கள், அடையாளக் குறியிடுதல், படங்கள் மற்றும் படவுருக்கள் நீக்கப்படவேண்டும். மேலும் தகவல்களுக்கு, தயவு செய்து எங்களை தொடர்பு கொள்ளவும்.